**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**Cr.M.P.NO-362/2025**

## Examination of PW1 (Complainant)

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கதுரை | Age: | 43 |
| Father's name | சாமியய்யா | Calling: | விவசாயம் |
| Village | அரவம்பட்டி | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.10.2025

**முதல் விசாரணை**

1. கடந்த 21.10.2024 ஆம் தேதி காலை சுமார் 08.50 மணியளவில், நான் அரவம்பட்டியில் உள்ள எனது கொல்லைக்கு சென்றேன். அப்போது, எனது இடத்தில், ஆசைத்தம்பி மற்றும் அவர் குடும்பத்தார் சவுக்கு கன்று வைத்துக்கொண்டிருந்தார்கள். நான் போய் கேட்டேன், அதற்கு அது உன் இடம் இல்லை என்று சொன்னார்கள். என்னை கம்பு எடுத்து அடித்தார்கள். 21.10.2024 ஆம் தேதி காலை 09.00 மணியளவில், கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மருத்துவமனையில் இருந்த போது, செல்வம் என்ற போலிஸ் என்னை விசாரித்தார். 07.11.2024 ஆம் தேதி, கந்தர்வக்கோட்டை தாலுகா, பிர்கா சர்வேயருக்கு நான் பணம் கட்டினேன். 14.02.2025 ஆம் தேதியன்று எனது இடத்தை அளந்தார்கள். எனக்கு சொந்தமான 33 1/2 செண்ட் விஸ்தீரணம் உள்ள சொத்தினை ஆக்கிரமித்திருந்தார்கள். அதைக்கேட்ட போது, கொச்சை வார்த்தைகளால் திட்டினார்கள். நாங்கள் இருவரும் காவல் துறையில் இருக்கிறோம், இடத்தை விட முடியாது என்று சொன்னார்கள். மீறி கேட்டால், என்னை வெட்டிக்கொன்று விடுவோம் என்று சொன்னார்கள்.

2) அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டி, முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் 14 அரசு அதிகாரிகளுக்கு புகார் அளித்தேன். இது நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்வதாக வந்துவிட்டேன்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**